04-03-2021 | tkn-03-07-uns-016841-54x5-aaa WC-818

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### பாதுகாப்பு அமைச்சு

## கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid Uninterrupted Power Supply (UPS) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு

**Contract Identification No: MOD/KDU/02/2020**

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு Hybrid Uninterrupted Power Supply (UPS) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பிற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக, துணைவேந்தர் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   **a. Hybrid OT உடன் Uninterrupted Power Supply (UPS) 01**

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. குறைந்தது 10 ஆண்டு கால வர்த்தகப் பதிவைக் கொண்ட Hybrid Uninterrupted Power Supply (UPS) வழங்கல் மற்றும் பராமரிப்பில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டு விலைமனுதாரர்கள் முறையாக நியமிக்கப்பட்ட (அங்கீகாரம் பெற்ற) உள்நாட்டு முகவர் (இலங்கை) மூலம் கூறுவிலை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்தது 440 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதற்கு இணையான பெறுமதியில் சராசரி ஆண்டுப் புரள்வை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும் (கடந்த 3 ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்)
   - முன்னர் கூறப்பட்ட உள்நாட்டு முகவரானவர் குறைந்தது 05 ஆண்டுகள் வர்த்தகப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.
   - அனைத்து வர்த்தகக் குறிகளும் இலங்கையில் குறைந்தது 05 ஆண்டுகள் சேவை வரலாற்றை கொண்டிருத்தல் வேண்டும்.
   - உற்பத்தியாளர்/ வழங்குநர் கடந்த 05 ஆண்டு காலத்தில் இதனை ஒத்த பண்புடைய குறைந்தது 03 ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அந்த 03 ஒப்பந்தங்களின் ஒவ்வொன்றும் மேலுள்ள நோக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதன் ஒவ்வொரு வழங்கலுக்கான ஒப்பந்தத் தொகை 220 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதற்கு இணையான பெறுமதிக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் உற்பத்தியாளரிடம் இருந்து 02 ஆண்டுகள் விரிவான உத்தரவாதம் மற்றும் 10 ஆண்டுகள் முறைமை உத்தரவாதம் மற்றும் உற்பத்தியாளரிடம் இருந்து உதிரிப்பாகங்கள், நுகர்பொருட்கள், மென்பொருள் மற்றும் துணைப்பொருட்களின் கிடைக்கும் தன்மை தொடர்பில் 10 ஆண்டுகள் உத்தரவாதத்தை வழங்கல் வேண்டும்.
   - உத்தரவாதக் காலத்திற்குள் நிறுவப்பட்ட முறைமையின் எந்த ஒரு விசாரணைக்காகவும் இலங்கையில் உள்நாட்டு அலுவலகம் அல்லது உள்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட முகவர் ஒருவர் இருத்தல் வேண்டும்.
   - பொருட்களை உற்பத்தி செய்யாத அல்லது தயாரிக்காத விலைமனுதாரர், விலைமனு ஆவணத்தின் பிரிவு IV இல் உள்ளடக்கப்பட்ட வடிவத்தை பயன்படுத்தி உற்பத்தியாளர் அனுமதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான தேவைகளை விலைமனுதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதோடு அந்த சட்டத்தின் சில முக்கிய பகுதிகளின் சுருக்கம் பின்வருமாறு;

   (1) ‘‘எந்த ஒரு விலைமனுதாரர் சார்பிலும் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவரான எந்த ஒரு நபரும், பிரிவு 10 இற்கு ஏற்ப பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவுசெய்தல் வேண்டும் என்பதோடு பிரிவு 6 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் தேவையான விபரங்களை பதிவுசெய்வதற்கு வழங்கல் வேண்டும்.’’

   (2) ‘‘விலைமனுதாரர் ஒருவரின் சார்பாக அல்லது முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்ட எந்த ஒரு நபராக இருப்பவரும், இந்த பிரிவின் கீழ் பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவுசெய்வதற்கு அவர் பதிவாளர் முன் முதலில் தாம் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவர் என்பதற்கான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.’’

   (3) (தொடர்புடையது என்றால்), 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய, விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்யும்போது அல்லது அதற்கு முன்னர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.
5. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலமானது ஒப்பந்தம் கைச்சாத்தான திகதியில் இருந்து (பயிற்சி மற்றும் பராமரிப்புத் தவிர்த்து) 90 நாட்காட்டி தினங்கள்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள்

   **தலைமை நிதி அதிகாரி I**  
   **பாதுகாப்பு அமைச்சு,**  
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**  
   **கொழும்பு 03,**  
   **இலங்கை (தொலைபேசி 011-2439381 தொலைநகல் 011-2390720)**

   என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம். விலைமனு ஆவணங்களை 2021 மார்ச் 08 அன்று தொடக்கம் 2021 மார்ச் 29 அன்று வரை வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம் ((தொலைபேசி 011-2439381 தொலைநகல் 011-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk)
7. விலைமனுதாரர் மற்றும் அவரது உள்நாட்டு முகவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
8. மீளளிக்கப்படாத 36,000.00 இலங்கை ரூபாவை (இலங்கை ரூபா முப்பத்தி ஆறாயிரம்) செலுத்தி 2021 மார்ச் 08 அன்று தொடக்கம் 2021 மார்ச் 29 அன்று வரை வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை தலைமை நிதி அதிகாரி I, பாதுகாப்பு அமைச்சு, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2021 மார்ச் 30 அன்று பி.ப. 1430 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது கீழுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம்.

   **பெறுகைப் பிரிவு,**  
   **பாதுகாப்பு அமைச்சு,**  
   **தரைத் தளம், இல. 15/5,**  
   **பாலதக்ஷ மாவத்தை,**  
   **கொழும்பு 03.**

   தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2021 மார்ச் 30 அன்று தொடக்கம் 2021 ஜூன் 28 அன்று வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 2021 மார்ச் 30 அன்று தொடக்கம் 2021 ஜூலை 26 அன்று வரை செல்லுபடியானதாக நிபந்தனையற்றதும் கோரும்போது பெறத்தக்கதுமான வடிவத்தில் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கில் இருந்து பெறப்பட்ட மூன்று மில்லியனே முந்நூறு ஆயிரம் இலங்கை ரூபா (இலங்கை ரூபா 3,300,000.00) ‘‘விலைமனு பிணை’’ ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையின் பயனாளியாக பாதுகாப்பு அமைச்சு, செயலாளர் இருத்தல் வேண்டும்.
11. தொடர்பு விபரங்கள்:

   **தலைமை நிதி அதிகாரி I**  
   **தொலைபேசி : 011-2439381**  
   **தொலைநகல் இல. : 011-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk**

   **பெறுகை அதிகாரி,**  
   **ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை,**  
   **வேரஹர, பொரலஸ்கமுவ, இலங்கை**  
   **தொலைபேசி : 0094-11-2044555/ நீடிப்பு 4373**  
   **தொலைநகல் : 0094-11-2044592**  
   **மின்னஞ்சல் : procurement_ uh@kdu.ac.lk**
12. பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமாக அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

   **தலைமை நிதி அதிகாரி I,**  
   **பாதுகாப்பு அமைச்சு,**  
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**  
   **கொழும்பு 03,**  
   **இலங்கை.**

விலைமனு திறக்கும் நிகழ்வில் பங்கேற்கும் தனிநபர்கள் விலைமனு திறக்கப்படுவதற்கு குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னர் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கத்தை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைமை நிதி அதிகாரி I,**  
**பாதுகாப்பு அமைச்சு,**  
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**  
**கொழும்பு 03,**  
**இலங்கை.**  
**மின்னஞ்சல் procurement@defence.lk**

குறித்த பெறுகை தொடர்பிலான எந்த ஒரு உத்தியோகபூர்வ விடயங்களிலும் பங்கேற்கும் தனிநபர்களின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கம். 13. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, பணிப்பாளர் மருத்துவ சேவை மாநாட்டு மண்டபத்தில் 2021 மார்ச் 17 அன்று மு.ப. 1000 க்கு இடம்பெறும்.

**தலைவர்**  
**அமைச்சு பெறுகைக் குழு,**  
**பாதுகாப்பு அமைச்சு,**  
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**  
**கொழும்பு-03.**  
**இலங்கை.**

2021 மார்ச் 07